முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

3 Scholarship IQS Scholarship IQS Scholarship IQS Scholarship IQS Scholarship IQS Scholarship IQS Scholarship IQSScholarship IQS Scholarship IQS Scholarship IQS Scholarship IQS Scholarship IQS Schola IQSSch Scholarship IQS Scholarship IQS Scholarship IQS Scholarship IQS Scholarship IQSScholarship IQS Scholarship 5

அறிவூட்டல் கருத்தரங்கு

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2021

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021

வினாத்தாள் I

நேரம்:- ஒரு மணித்தியாலம்

சுட்டெண்:- .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :-

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின்** மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக **ஒரு தாள்** வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு


பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

இக்பால் சேர்
T.M IQBAL (JP) I.S.A
Online Zoom Seminar
0770577211
0716112992

{பக். 2 ஐப் பார்க்க


- 1, 2 ஆகிய வினாக்களில் உள்ள அடைப்புகளில் இருக்கும் கூட்டத்துடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

1. 


(1)


(2)


(3)


2. 


(1)


(2)


(3)

- 3, 4 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து விடை தருக.

3. 
உரு A


உரு B

A, B ஆகிய இரு உருக்களுக்குமிடையே எத்தனை வேறுபாடுகள் உள்ளன?

(1) 1 (2) 2 (3) 3


4. 
உரு C



உரு D

C, D ஆகிய இரு உருக்களுக்குமிடையே உள்ள வேறுபாடுகளின் எண்ணிக்கை

(1) ஐந்திலும் குறைவாகும் (2) ஐந்தாகும் (3) ஐந்திலும் கூடவாகும்

5. கீழே தரப்பட்டுள்ள கோலம் தொடர்ந்து செல்லும் போது ஆறாம் இடத்தில் வரத்தக்க அட்டையைத் தெரிவு செய்கை.


4 5 6…?…


(1) (2) (3)

www.lkedu.lk

சுட்டெண்:.....

- இக்கவிதையை வாசித்து வினாக்களுக்கு உரிய விடையைத் தெரிவு செய்க.

சூரியன் உதிக்கிறது
பூக்கள் மலர்கின்றன
வண்டுகள் வட்டமிட்டு
தேனைக் குடிக்கின்றன.

6. இக்கவிதை நாளின் எப்பொழுதை குறிக்கிறது?


(1) மாலை (2) இரவு (3) காலை

7. தேனைக் குடிப்பன

(1) பூக்கள் (2) வண்டுகள் (3) சூரியன்

- முதலில் தரப்பட்டுள்ள உருவுக்கு **ஒத்த உருவைத்** தெரிவு செய்க.

8.



(1) (2) (3)

9.



(1) (2) (3)

10. "நீலா சிறுகச்சிறுக சேமித்த பணம் அவளுடைய கல்வித் தேவைக்கு உதவியது" இதற்குப் பொருத்தமான பழமொழி.

(1) சிறு துளி பெரு வெள்ளம்.
(2) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
(3) ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு.

11. "அழுத பிள்ளை பால் குடிக்கும்" என்பதற்குப் பொருத்தமான வேறொரு பழமொழியைத் தெரிவு செய்க.

(1) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
(2) ஆறிய கஞ்சி பழங்கஞ்சி
(3) அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.

www.ukedu.lk


12. கீழே தரப்பட்ட உருக்களில் அரைவாசியைக் காட்டும் உருக்கள் எவை?




A



B




C




D

(1) A யும் B யும் (2) A யும் D யும் (3) A யும் C யும்


13. கீழே தரப்பட்டுள்ள உருக்களில் $\frac{1}{4}$ ஐக் காட்டும் உரு



(1)



(2)



(3)

14. ரூ. 514.26 ஐ R.BGD.AS என குறிக்கப்படுமாயின் ரூ. 1246.15 குறிக்கப்படும் முறை

(1) R.GADS.GB (2) R.GDSA.GS (3) R.GADS.BG

15. இரு பக்கமும் சமமாக உள்ள விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

(1) MOLWBX – WLMXBO

(2) 3554763 – 3557463

(3) 3K3E4C – 3K3E4C

- ஓட்டப்போட்டி ஒன்றில் ஐந்து மாணவர்கள் ஓடி முடிக்க எடுத்த நேரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கமால் - 7 நிமிடம் விதால் - 6 நிமிடம்

அமாஸ் - 5 நிமிடம் நாமல் - 8 நிமிடம்

சமாஸ் - போட்டியை நிறைவு செய்யவில்லை.

16. மாணவர்கள் வெற்றிக்கம்பத்தை அடைந்த ஒழுங்குமுறை.

(1) அமாஸ், விதால், கமால், நாமல்

(2) நாமல், கமால், சமாஸ், விதால்

(3) கமால், அமாஸ், நாமல், சமாஸ்

17. இப்போட்டியில் முதலாவதாக வந்தவர்


(1) அமாஸ் (2) நாமல் (3) கமால்

www.ikeduk

18. மைதானம் ஒன்றில் சிவப்பு, நீலம், மஞ்சள் எனும் ஒழுங்கில் 24 கொடிகள் நடப்பட்டுள்ளன. 20 வது கொடியின் நிறம் யாது?

(1) மஞ்சள் (2) சிவப்பு (3) நீலம்

19. சதுரவடிவமான தாள் ஒன்றை நான்காக மடித்து இரண்டு துளைகள் இடப்பட்டுள்ளன. இதனை விரிக்கும் போது தோன்றும் உரு.



(3) (2) (3)

- நிமலின் வயது ஒன்பது வருடங்களாக இருக்கும் போது கமலின் வயது பதின்மூன்று வருடங்கள் ஆகும்.

20. கமலின் வயது நிமலின் வயதைப் போல் இரு மடங்காக இருந்தது கமலின் எத்தனையாவது வயதில்?

(1) 2 ஆவது (2) 4 ஆவது (3) 8 ஆவது

21. நிமலின் வயதைப் போல் கமலின் வயது மும்மடங்கு ஆனது நிமலின் எத்தனையாவது வயதில்?


(1) 2 ஆவது (2) 4 ஆவது (3) 8 ஆவது

22. மாலன் ஒரு மீற்றர் 20 சென்றிமீற்றர் நீளமான கம்பித் துண்டொன்றை சரிபாதியாக இரண்டு துண்டுகளாக வெட்டி ஒரு துண்டால் ஒரு சதுரம் அமைத்தான். சதுரத்தின் ஒரு பக்க நீளம் யாது?

(1) 20 cm (2) 15 cm (3) 40 cm

23. எஞ்சிய கம்பித்துண்டினால் சமபக்க முக்கோணி ஒன்றை அமைத்தான். அச்சமபக்க முக்கோணியின் ஒரு பக்க நீளம் யாது?

(1) 20 cm (2) 15 cm (3) 40 cm

24. 

இவ்வுருவில் A யினால் காட்டப்பட்டுள்ள கோணம்

(1) செங்கோணத்திற்கு சமன்.
(2) செங்கோணத்தை விட குறைந்தது.
(3) செங்கோணத்தை விட கூடியது.

www.lkedu.lk

25. A, B, C என்பது மூன்று தூண்களாகும். B தூண் A தூணின் அரை மடங்காக இருக்கும் அதேவேளை C தூண் B தூணின் அரைவாசியாகும். C தூணின் உயரம் 6m எனின் A தூணின் உயரம் யாது?


(1) 18m (2) 30m (3) 24m

26. குமார் பியலின் வீட்டுக்குச் செல்வதற்கு வீட்டிலிருந்து புறப்பட்டபோது சூரியன் உதிப்பதைக் கண்டான். அத்திசையில் 200m முன்னோக்கிச் சென்று இடது கைப்பக்கம் திரும்பி மேலும் 500m சென்று மீண்டும் இடது கைப்பக்கம் திரும்பி பயணத்தை தொடர்ந்தான். அவன் தற்போது பயணிக்கும் திசை.

(1) மேற்கு (2) தெற்கு (3) வடக்கு

- தரப்பட்ட உருக்களில் இரண்டு ஒத்தவை. அந்த இரண்டு உருக்களும் யாவை?


27.



A **B** **C**

(1) A யும் B யும்
(2) B யும் C யும்
(3) Aயும் C யும்

28.



P **Q** **R**

(1) P யும் R உம்
(2) P உம் Q உம்
(3) Q உம் R உம்

29. சதுரவடிவக் காணியைச் சுற்றி 56 தூண்கள் நடப்பட்டுள்ளன. ஒரு பக்கம் நின்று பார்க்கும் போது தெரியும் தூண்களின் எண்ணிக்கை.


(1) 13 (2) 15 (3) 17

30. பை ஒன்றினுள் மஞ்சள் நிற மாபிள்கள் 5 நீல நிற மாபிள்கள் 4 பச்சை நிற மாபிள்கள் 3 வீதம் இருந்தன. பச்சை நிற மாபிள் ஒன்றை எடுப்பதற்கு முயற்சிக்க வேண்டிய தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 7 (2) 10 (3) 9

www.lkedu.lk

- ஒரு வகுப்பறையில் உள்ள மாணவர்கள் விரும்பும் பழங்கள் பற்றிய விபரம் இங்கு காட்டப்பட்டுள்ளது.



A – தோடம் பழத்தை விரும்புவோர்

B – அப்பிள் பழத்தை விரும்புவோர்.

C – மாம்பழத்தை விரும்புவோர்.

31. அப்பிள் பழத்தையும் மாம்பழத்தையும் மாத்திரம் விரும்பக்கூடியவர்களைக் காட்டும் எழுத்து.

(1) E (2) G (3) F

32. மூன்று பழங்களையும் விரும்பக்கூடிய மாணவரைக் குறிக்கும் எழுத்து.

(1) E (2) F (3) G

- **பொருத்தமற்ற** சொற்கள் உள்ள கூட்டத்தைத் தெரிவு செய்க.

33.

(1)	(2)	(3)
விவசாயி வயல் மண்வெட்டி	விளையாட்டு வீரன் பேனை மைதானம்	கடல் மீன்வலை செம்படவன்

34.

(1)	(2)	(3)
நீலம் சிவப்பு மஞ்சள்	இனிப்பு புளிப்பு சுவை	செவ்வாய் புதன் வியாழன்


35. சரியான கோவையைத் தெரிவு செய்க.

(1) 999 + 99 + 99 + 9 + 9 = 1125

(2) 999 + 99 + 9 + 9 + 9 = 1125


(3) 999 + 99 + 99 + 9 + 9 + 9 = 1125

www.ikedu.lk

36. 

உருவில் ஒத்த மரக் குற்றிகள் சிலவற்றைப் பயன்படுத்தி உருவாக்கிய அமைப்பு காட்டப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள மரக்குற்றிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 6 (2) 8 (3) 10

37. 

இவ்வுருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?

(1) 10 (2) 12 (3) 16

38. மனிதன் ஒருவன் படம் ஒன்றைக்காட்டிப் பின்வருமாறு கூறினான். "எனக்கு சகோதரனோ, சகோதரியோ இல்லை. இருந்தபோதும் படத்தில் இருப்பவரின் தந்தை எனது தந்தையாரின் புதல்வர் ஆவார்". இம்மனிதன் யாருடைய படத்தைக் காட்டினான்.


(1) தனது தந்தையின் (2) தனது (3) தனது மகனின்

39. 3456 : 4653 எனின் 1234 : .....

(1) 2341 (2) 2143 (3) 2431

- கீழ் வரும் வினாவில் ஒரு நிகழ்ச்சியின் ஐந்து சந்தர்ப்பங்களுக்குரிய உருக்கள் ஒழுங்குவரிசை மாற்றப்பட்டு A, B, C, D, E எனத் தரப்பட்டுள்ளது. அவ்வுருக்களில் நிகழ்ச்சிகளின் சரியான ஒழுங்குவரிசை இடம்பெறும் விடையைத் தெரிவுசெய்க.

40. ஒரு பிள்ளை நித்திரை விட்டெழுந்து, ஆயத்தமாகி, பாடசாலைக்குப் புறப்படுதல்



(1) B C A D E (2) B C E D A (3) C B D E A

***

முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

3 Scholarship IQS Scholarship IQS Scholarship IQS Scholarship IQS Scholarship IQS Scholarship IQS Scholarship IQSScholarship IQS Scholarship IQS Scholarship IQS Scholarship IQS Scholarship IQS Scholarship IQS Schola IQSSch Scholarship IQS Scholarship IQS Scholarship IQS Scholarship IQS Scholarship IQS Scholarship IQSScholarshipIQS Scholarship 5

அறிவூட்டல் கருத்தரங்கு

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2021

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021

வினாத்தாள் II

1மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண்.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :-

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின்** மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக**
- மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- செய்கை வேலைக்காக **ஒரு தாள்** வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

இக்பால் சேர்
T.M IQBAL (JP) I.S.A
Scholarship
Online Zoom Seminar
0770577211
0716112992

[பக்கம் 2ஐப் பார்க்க]

1. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

இலங்கையில் முதலாவதாக நிர்மாணிக்கப்பட்ட தெற்கு அதிவேகப் பாதையினூடாக காலிக்குச் செல்லத் தயாரானோம். மின்னல் வேகத்தில் செல்லும் எமது பேரூந்தைப் பார்க்க எமக்குப் பயமாகவும் குதூகலமாகவும் இருந்தது. நாம் அனைவரும் விமானத்தில் பறப்பதுபோலப் பாவனை செய்தோம். வீதியின் இரு மருங்கிலும் நீல நிற வீதிக் குறியீடுகளைப் பார்த்த படியே காலி நகரை அடைந்தோம்.

- பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக. .....

(ii) உயர்திணைப் பன்மை இறந்தகால வினைச்சொல் ஒன்றை எழுதுக. .....

(iii) "சந்தோசமாகவும்" என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. .....

(iv) இங்கு காணப்படும் உவமானத்தை எழுதுக. .....

(v) சங்கிலிக்கொம்பு மாத்திரம் உள்ள மூன்றெழுத்துச் சொல்லை எழுதுக.

.....

(vi) பந்தியில் காணப்படும் ஐந்தெழுத்துச் சொல் ஒன்றிலிருந்து இரண்டு எழுத்துக்களை நீக்கினால் வெட்டும் உபகரணம் ஒன்றின் பெயர் வரும். அதனை எழுதுக.

.....

2. உயர்திணை, ஒருமை, ஆண்பால், பெயர்ச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

அதிபர் சேவல் சிறுவன் மாணவர்கள் ஆண்கள்

3. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

அன்னையின் / அற்புதமே / படைப்பில் / இயற்கை / அனைத்தும்

.....

4. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு **சரியாயின்** ✓ எனவும் **பிழையாயின்** ✗ எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.

(i) காற்று வேகமாக வீசியதால் மரங்கள் முறிந்து விழுந்தது. (.....)

(ii) ஆண்டுகள் பல கழிந்தது. (.....)

(iii) பீர்பாலும் மந்திரியும் அந்த நாட்டை அடைந்தனர். (.....)

(iv) பசுக் கன்றுகள் புற்றரைகளை நோக்கி விரைந்து செல்கின்றது. (.....)

5. பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

(i) ஆஹா தமிழினியின் கண்கள் வியப்பால் விரிந்தன

(ii) ஆனால் நீ ஒருபோதும் உன் படிப்பைக் கைவிட்டு விடாதே

6. எதிர்ச்சொல்லை எழுதுக.

சேய்மை :- .....

www.ikeau.lk

சுட்டெண்:.....

7. பின்வரும் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான பழமொழிகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) முயற்சி செய்தால் பயன் கிடைக்கும்.

.....

(ii) கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

.....

8. பின்வரும் விடுகதைகளுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) என்னை நீங்கள் பார்க்கலாம்; தொடலாம்; ஆனால் பிடிக்க முடியாது. நான் யார்?

.....

(ii) நீட்டிக்கொண்டு நீளமாகவும் படுப்பேன். சுருட்டிக்கொண்டு மூலையிலும் நிற்பேன். நான் யார்?

.....

9. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) நாங்கள் குடியிருந்த நந்தவனம் சில மனிதர்களால் .....
(அளிக்கப்பட்டது / அழிக்கப்பட்டது)

(ii) பெருநாள் தினத்தன்று, புத்தாடை .....(அணிவோம் / அனிவோம்)


10. பின்வரும் வாக்கியத்தை எதிர்காலத்தில் எழுதுக.

காவியா நாட்டியம் ஆடுகிறாள். .....

11. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் **தமிழில்** எழுதுக.

(i) Jasmine :- ..... (ii) Finger :- .....

12. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை **ஆங்கில** எழுத்துக்களிலேயே எழுதுக.

(i)  ..... (ii)  .....

13. பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

(i) This / pencil / is / my .....

(ii) the / canteen / I / going / am / to .....

14. " தபல் கார்யாலய" எனும் சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.


.....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் **தமிழ்** எழுத்துக்களில் எழுதுக.

உங்கள் வகுப்பு எது? .....

www.ikeju.lk

16. காட்டப்பட்டுள்ள இலக்க அட்டைகள் நான்கையும் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகச் சிறிய எண்



.....

17.(i) ஒருவர் பயணத்தை ஆரம்பிக்கும் போது வாகனத்தின் மாணியில் என்ற இலக்கங்கள் காணப்பட்டன. வாகனம் மேலும் 51 km பயணம் சென்ற பின்னர் மாணியில் பதிவாகும் இலக்கங்களை எழுதுக.

0	4	0	9	4	9	km

						km

(ii) நீர் எழுதிய எண்ணை சொற்களில் எழுதுக.

.....

18. எண் கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் முறையே எழுதுக.

2037, 2027, 2017, 2007 ....., ...

19. பின்வருவனவற்றில் வெற்று அடைப்புக்கள் இரண்டிற்கும் பொருத்தமான இரண்டு இலக்கங்களையும் அடைப்புக்குள் எழுதுக.

$$\begin{array}{r} \square 34 \\ +\ \square 85 \\ \hline 519 \end{array}$$

20. பத்தொன்பது எனும் எண்ணை உரோமன் எண்குறியில் குறித்துக் காட்டுக. .....

21. 20cm நீளமான கயிற்று வடமொன்று இரு சமபகுதிகளாக வெட்டப்பட்டு, அதில் ஒரு பகுதி மீண்டும் 5 சம துண்டுகளாக வெட்டப்பட்டன எனின், வெட்டப்பட்ட ஒரு துண்டின் நீளம் யாது?

..... cm

22. 10 பேனாக்கள் வீதம் உள்ள 3 பெட்டிகளும். 9 பேனாக்கள் வீதம் உள்ள 5 பெட்டிகளும் உள்ளன. 8 பெட்டிகளிலும் உள்ள பேனாக்களின் எண்ணிக்கை யாது?

.....

23. 

கடிகார முகம் காட்டுவது பிற்பகல் நேரம் எனின், அதனை டிஜிடல் நேரத்தில் குறித்துக் காட்டுக.

		:		

24. 1000 இன் அரைவாசியுடன் 10 ஐக் கூட்டி 5 ஐக் கழித்தால் வரும் விடை யாது?


.....

www.ikeau.lk


25. ரூபாய் 83.00 பெறுமானமுள்ள பொருட்களை வாங்கிய ஆகில் ரூபாய் 500.00 தாள் ஒன்றினையும் ரூபாய் 33.00 இனையும் கொடுத்தான். அவனுக்குக் கொடுக்க வேண்டிய மீதிப் பணம் எத்தனை ரூபாய்?

ரூபாய் .....

26.



ரூபாய் 75.00



ரூபாய் 100.00

(i) அப்பிள் பழம் ஒன்றின் விலை யாது? ரூபாய் .....

(ii) அன்னாசிப் பழத்தினதும் தோடம்பழத்தினதும் மொத்த விலை யாது?

ரூபாய் .....

27. மாந்தோப்பு ஒன்றில் ஒவ்வொரு வருட இறுதியிலும் 2 மரங்கள் வெட்டப்படும் போது 5 மரங்கள் நட்டப்படுகின்றன. தோப்பில் ஆரம்ப வருடத்தில் இருந்த மரங்களின் எண்ணிக்கை 8 எனின், 3 வருடங்களின் பின்னர் மாந்தோப்பில் இருக்கக்கூடிய மரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....


28. 2500 ml நீர் கொள்ளும் ஒரு பாத்திரத்தை 150 ml நீர் கொள்ளும் ஒரு சிறிய பாத்திரத்தினால் 8 முறை நீர் ஊற்றப்படுகின்றது.

(i) தற்போது பாத்திரத்திலுள்ள நீரின் அளவு யாது? ..... ml

(ii) பாத்திரம் நிரம்புவதற்கு இன்னும் ஊற்ற வேண்டிய நீரின் அளவு யாது?

..... ml

29.



மாணவர் குழுவொன்று அதிகம் விரும்பும் பழங்கள் பற்றிய தகவல்கள் வரைபில் தரப்பட்டுள்ளன.

(i) வாழைப்பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை, மாம்பழத்தை விரும்பும் மாணவர்களிண் எண்ணிக்கையை விட எவ்வளவு கூடுதலானது?

: .....

(ii) குழுவில் உள்ள மொத்த மாணவர் தொகை எவ்வளவு? : .....

www.ikedu.lk

- இலக்கம் **30** தொடக்கம் **59** வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் **கீழ்க் கோடிடுக.**

30. ஆண்டு முழுவதும் பூக்கும் தாவரம்
(1) கொன்றை (2) முள்முருக்கு (3) அலரி

31. உணவுச் சமிபாட்டைத் துரிதப்படுத்தும் பழம் எது?
(1) பப்பாசி (2) மாதுளை (3) கொய்யா

32. முதுகெலும்பு இல்லாத பிராணி அல்லாதது
(1) அட்டை (2) பல்லி (3) மண்புழு

33. தொற்று நோயாளர்கள் உள்ள வீட்டு வாசலில் அடையாளப்படுத்தி வைத்திருப்பது
(1) வாழையிலை (2) வேப்பிலை (3) குருத்தோலை

34. பாடசாலை மாணவர்களுக்கு அரசினால் வழங்கப்படுகின்ற இலவசக் காப்புறுதித் திட்டம்
(1) அக்ரஹார (2) சிசு சரிய (3) சுரக்ஷா

35. மழை பெய்யப் போவதை உணர்ந்து கொள்ளத்தக்க பறவையின் நடத்தை
(1) காகங்கள் கரைதல்
(2) ஆந்தைகள் அலறுதல்
(3) ஆட்காட்டிக் குருவிகள் தாழப் பறத்தல்

36. இலங்கைக்கே உரித்தான அனேக தாவரங்கள் காணப்படும் இடம்
(1) படகமுவ வனம் (2) வில்பத்து (3) சிங்கராஜவனம்

37. ஆகாயத் தோட்டி என அழைக்கப்படும் பறவை
(1) பருந்து (2) கிளி (3) காகம்

38. வயல் உழும் விவசாயிகளுக்கு பெரும்பாலும் ஏற்படத்தக்க நோய்
(1) மலேரியா (2) டெங்கு (3) எலிக்காய்ச்சல்

39. உதைபந்தாட்டப் போட்டியொன்று நடைபெறும்போது ஒரு அணிசார்பாக விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை
(1) 11 (2) 12 (3) 13

40. வீட்டுத் தோட்டத்திற்கு வேலியடிப்பதற்கு பொருத்தமான வேலிப் பயிர் எது?
(1) முருங்கை (2) அகத்தி (3) கட்டாமணக்கு

41. புராதன வெள்ளரசு மரம் உள்ள இடம்
(1) பொலன்னறுவை (2) கண்டி (3) அநுராதபுரம்


42. இலங்கையின் மிக அழகான நீர்வீழ்ச்சி அமைந்துள்ள மாகாணம் எது?
(1) ஊவா மாகாணம் (2) சப்ரகமுவ மாகாணம் (3) மத்திய மாகாணம்

43. பொருளொன்றின் சுட்டியில் (Label) EXP 12.12.2021 என எழுதப்பட்டிருப்பது குறிப்பது
(1) பாவனைத் திகதி
(2) உற்பத்தித் திகதி
(4) பாவனை முடிவுத் திகதி

www.lkedu.lk

44. சிறுவர் உரிமை மீறல் தொடர்பாக அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
(1) 1929 (2) 1969 (3) 1990

45. பின்வரும் உடுத் தொகுதிகளில் தெற்கு வானில் காணப்படும் உடுவாகக் கருதக் கூடியது

(1)  (2)  (3) 

46. காசுக்கட்டளை ஒன்றை மாற்றிப் பணம் பெறச் செல்ல வேண்டிய இடம்
(1) தபாலகம் (2) பிரதேச சபை (3) வங்கி


47. 24 மணித்தியாலமும் இயங்கும் சேவை நிலையம் ஒன்று
(1) தபால் நிலையம் (2) சந்தை (3) வைத்தியசாலை

48.  படத்தில் காட்டப்பட்டுள்ள குறியீடு குறிப்பது
(1) வலைந்து செல்லத் தடை
(2) முந்திச் செல்லத் தடை
(3) நேரே செல்லத் தடை

49. போக்குவரத்து சமிக்ஞை விளக்கில் மஞ்சள் நிறம் குறிப்பது
(1) செல்லவும் (2) தயாராகவும் (3) நிறுத்தவும்

50. தச்சன் பயன்படுத்தாத ஒரு உபகரணம்
(1) சீவுளி (2) கைவாள் (3) அரிவாள்

51. இலங்கையின் முதலாவது பௌத்த மன்னன்
(1) தேவநம்பியதீசன் (2) பண்டுகாபயன் (3) எல்லாளன்

52.  அருகில் தரப்பட்டுள்ள தையல் முறை யாது?
(1) நிரப்புத் தையல் (2) விஸ்பம் தையல் (3) சிறுநூலோடல்

53. விற்றமின் 'D' அதிகம் காணப்படுவது
(1) மீனெண்ணெய் (2) நல்லெண்ணெய் (3) தேங்காய் எண்ணெய்


54. கொத்தன் பயன்படுத்தும் உபகரணங்களைக் கொண்ட கூட்டம்
(1) சாந்தகப்பை, மணியாசு, மட்டக்கம்பு
(2) உளி, சீவுளி, மணியாசு
(3) மட்டப்பலகை, சாந்தகப்பை, உளி

55. பூமிக்கு மிக அண்மையில் உள்ள கோள்
(1) புதன் (2) சுக்கிரன் (3) செவ்வாய்

www.lkedu.lk

56. அருகில் உள்ள உருவில் இருப்பவர்
(1) ரி.பி. ஜாயா
(2) டீ. எஸ். சேனாநாயக்கா
(3) டீ. ஆர். ஜயவர்தன




57. 

படத்தில் காட்டியவாறு ஒரு கண்ணாடிக் குவளையில் கைக்குட்டையை அமுக்கிவிட்டு, நீர் நிரப்பிய ஒரு பாத்திரத்தில் அக்கண்ணாடிக் குவளையை வைத்தால் யாது நிகழும்?

(1) கைக்குட்டை நனையும் (2) கைக்குட்டை நனையாது (3) கைக்குட்டை நீரில் விழும்

58. உறுதிப்பாடான நடத்தைகளை வெளிக்காட்டுவதால் ஏற்படும் நன்மை
(1) பிரச்சினைக்குத் தற்காலிகத் தீர்வு
(2) கௌரவத்துக்குப் பங்கம்
(3) நல்லுறவு பேணப்படல்

59. பின்வரும் மின்குமிழ்களில் ஒளிரக்கூடிய மின்குமிழ்



(1) (2) (3)

60. சில மாதங்களாகப் புவியின் மேற்பரப்பில் ஒரு மழைத்துளியும் விழவில்லை. கடும் வெப்பத்தின் விளைவாக நிலத்தில் வெடிப்புகள் கோடுகளாகக் காணப்பட்டன. ஆறுகள், குளங்குட்டைகள், கிணறுகள், தடாகங்கள் ஆகியன வரண்டு போய் இருந்தன. கண்ணிற்குத் தெரியும் அளவிற்குப் பச்சை நிறம் காணப்படவில்லை.
திடீரென இடி மின்னலுடன் வானம் மழை பொழியத் தொடங்கியது…..
(இதனைத் தொடர்ந்து ஐந்து சொற்களுக்குக் குறையாத மூன்று வாக்கியங்கள் எழுதுக. அவ்வாக்கியங்களில் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாக இருக்க வேண்டும்.)

(i) ……...

……..,……

(ii) ……..

……..

(iii) ……..

……...

www.ikedu.lk

அறிவூட்டல் கருத்தரங்கு 3-1
விடைகள்

1. (2)	2. (2)	3. (3)	4. (2)	5. (2)	6. (3)	7. (2)	8. (3)
9. (2)	10. (1)	11. (3)	12. (2)	13. (3)	14. (1)	15. (3)	16. (1)
17. (1)	18. (3)	19. (2)	20. (3)	21. (1)	22. (2)	23. (1)	24. (3)
25. (3)	26. (1)	27. (3)	28. (2)	29. (2)	30. (2)	31. (1)	32. (3)
33. (2)	34. (2)	35. (2)	36. (3)	37. (3)	38. (3)	39. (3)	40. (2)

புள்ளிகள்

1 - 3	11 - 28	21 - 53	31 - 78
2 - 5	12 - 30	22 - 55	32 - 80
3 - 8	13 - 33	23 - 58	33 - 83
4 - 10	14 - 35	24 - 60	34 - 85
5 - 13	15 - 38	25 - 63	35 - 88
6 - 15	16 - 40	26 - 65	36 - 90
7 - 18	17 - 43	27 - 68	37 - 93
8 - 20	18 - 45	28 - 70	38 - 95
9 - 23	19 - 48	29 - 73	39 - 98
10 – 25	20 - 50	30 - 75	40 - 100

www.lkedu.lk

அறிவூட்டல் கருத்தரங்கு 3-ii

விடைகள்

1. (i) எமது / நாம் (ii) தயாரானோம் / செய்தோம் / அடைந்தோம் (iii) குதூகலமாகவும்
   (iv) விமானத்தில் பறப்பது (v) நகரை (vi) கத்தி
2. சிறுவன்
3. இயற்கை அன்னையின் படைப்பில் அனைத்தும் அற்புதமே
4. (i) × (ii) × (ii) √ (iv) ×
5. (i) ஆஹா! தமிழினியின் கண்கள் வியப்பால் விரிந்தன.
   (ii) ஆனால், நீ ஒருபோதும் உன் படிப்பைக் கைவிட்டு விடாதே.
6. அண்மை
7. (i) அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும். / அழுத பிள்ளை பால் குடிக்கும்.
   (ii) காற்றுள்ள போதே தூற்றிக்கொள். / அலை மோதும் போதே தலை முழுகு.
8. (i) நிழல் (ii) பாய்
9. (i) அழிக்கப்பட்டது (ii) அணிவோம்
10. காவியா நாட்டியம் ஆடுவாள்.
11. (i) மல்லிகை (ii) விரல்
12. (i) Bulb (ii) Kite
13. (i) This is my pencil (ii) I am going to the canteen
14. தபால் காரியாலயம் / தபால் நிலையம் / தபாற் கந்தோர் / அஞ்சல் அலுவலகம்
15. ஒபே பந்திய குமக்த?

(புள்ளி 30 x 1 = 30)

16. 1289
17. (i) 041000 km (i) நாற்பத்தோராயிரம்
18. 1997, 1987
19. 2,2 1,3 3,1
20. xix
21. 2cm
22. 75
23. 22 : 05
24. 505
25. ரூபாய் 450.00
26. (i) ரூபாய் 25.00 (ii) ரூபாய் 50.00
27. 17
28. (i) 1200 ml (ii) 1300 ml
29. (i) 3 (ii) 40

(16 முதல் 28 வரை ஒரு விடைக்கு 2 புள்ளி வீதம் 16 x 2 = 32 , 29 இற்கு ஒரு விடைக்கு 1 புள்ளி வீதம் 2 புள்ளிகள் மொத்தம் 34 புள்ளிகள்)

30. (3)	31. (1)	32. (2)	33. (2)	34. (3)	35. (3)
36. (3)	37. (3)	38. (3)	39. (1)	40. (3)	41. (3)
42. (1)	43. (3)	44. (1)	45. (3)	46. (1)	47. (3)
48. (2)	49. (2)	50. (3)	51. (1)	52. (2)	53. (1)
54. (1)	55. (2)	56. (2)	57. (2)	58. (3)	59. (1)

(புள்ளி 30 x 1 = 30)

60. பொறுத்தமான வாக்கழயங்களுக்கு புள்ளி வழங்கவும். (புள்ளி 3 x 2 = 6)

மொத்தப் புள்ளி 100

www.ikedu.lk